[1978 மார்ச் 1]

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலும் டவுன் பஸ்களில் பெண்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்குகின்றார்கள். அதே போல் துரித வண்டிகளில் தனியாகப் பெண்களுக்கு என்று இடம் ஒதுக்கவில்லை, போர்டும் இல்லை. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல யோசனையை அரசு பரிசீலித்து செயல் படுத்த முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை பணியாளரது முறையீடுகள்.

* வினு 502—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் பர்மா அகதிகள் 2—8—1977-ம் நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு ஏதேனும் தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மேல் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) விவரமான அறிக்கை* சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, அகதிகளாக இருந்து தாயகம் திரும்பியிருக்கின்றவர்கள் பணியில் அமர்த்தப்படும் போது, அவர்கள் தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றார்களா அல்லது நிரந்தரமாக அமர்த்தப்படுகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*[1058-1059ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்புகின்றவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தற்காலிகமாக பயிற்சியாளராக அமர்த்தப்படுகிருர்கள். பயிற்சி காலம் முடிந்த பிறகு வேலையின் திறமையைப் பார்த்து முன் உரிமை கொடுத்து நிரந்தரமான வேலைகளில் அமர்த்தப்படு கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் அமல்படுத்துவதில்லை. மணல்மேடு பஞ்சாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அங்கு செய்யப்பட்ட ஒப்பந்தம் அமல் நடத்தப்படாததால் வேலைநிறுத்தம் போன்றவைகள் ஏற்படு கின்றன. ஆகவே, அரசு இதைக் கருத்திற் கொண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களை சரியான முறையில் அமல் நடத்துவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டம்-பிரிவு 12 (3)-ன் மேல் இந்த மூலக் கேள்வியில் குறிப்பிட்டுள்ள மணல்மேடு மில்லில் சமரசம் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆணைகளும் அரசு பிறப்பித் துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள உறுதிமொழிகளில் இன்னின்ன வற்றை நிர்வாகம் நிறைவேற்றவில்லை என்றோ, அல்லது நிறை வேற்றுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்றோ, தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிர்வாகத்தால் மீறப் படுகிறது என்றோ அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிர்வாகத்தின் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மரமேறும் தொழிலில் ஈடுபட்டிருந்தோருக்கு உதவி.

*503 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

மதுவிலக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட மரமேறும் தொழிலாளர்கட்கு ஆண்டுக்கு அரசு காதி போர்டு மூலம் செய்யும் செலவுத் தொகை என்ன ?